Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No.CC . No. 14/2024
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS -27

| | | | |
|---|---|---|---|
| Name: | நிலவழகன் | Calling: | காவல் துணை கண்காணிப்பாளர் |
| Father's/Husband's Name: | கிருஷ்ணமூர்த்தி | Religion: | |
| Village: | வேலூர் | Age: | 59 |
| Taluk: | வேலூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 02.07.2026 நேரம் : 12.56 PM

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

அ.சா.27 முதன்மை விசாரணை.

இவ்வழக்கில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. வெங்கடராகவன் என்பருக்காகவும், தலைமை காவலர் திரு. மனோகரன் என்பவருக்காவும், பெண் காவலர் திருமதி. துளசி என்பவருக்காவும் சேர்த்து ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கவும் அவர்கள் தாயரித்த ஆவணங்களை இந்த சாட்சியம்மூலம் குறியீடு செய்யவும் கற்றறிந்த எதிரிகளின் தரப்பு வழக்கிறஞர் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தெரிவித்தார்.

நான் தற்போது வேலூர் சரக பணியிடைப்பயிற்சி மையத்தில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2023 ம் வருடம் திருப்பத்தூர் மாவட்ட குற்றபிரிவு காவல் துணை கண்காணிப்பாளராக பணியாற்றியபோது திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில் வாணியம்பாடி உட்கோட்ட கூடுதல்

பொறுப்பாக பணியில் இருந்தேன். 28.02.2023 ம் தேதி வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய காவல் ஆய்வாளர் திரு. அருண் குமார் என்பவர் வாதி ராஜீ என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று சாலை விபத்து சம்மந்தமாக கொடுத்த புகாரின் அடிப்படையில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்ற எண் 83/2023 சட்டப்பிரிவுகள் 279,304(A) IPC படிக்கு வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்ததை நான் 28.02.2023 ம் தேதி புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் புகார்தாரரின் மகன்கள் சூர்யா வயது –12, விஜய் வயது –13 ஆகியோர்கள் ஒரு சைக்கிளிலும் வாதியின் பக்கத்து வீட்டில் வசிக்கும் சாமுவேல் என்பவரின் மகன் ரபிக் வயது 13 என்பவர் ஒரு சைக்களிலும் கிரிசமுத்திரத்தில் உள்ள அரசு மேல் நிலைபள்ளிக்கு செல்லும் போது காலை 08.45 மணிக்கு சம்பவயிடமான ஆம்பூர் – வாணியம்பாடி நெடுஞ்சாலையான வளையாம்பட்டு சாமி அன் கோ லெதர் கம்பெனி எதிரே சர்வீஸ் ரோட்டில் ஆம்பூர் மார்க்கமாக இருந்து வந்த KA 03 AF 0194 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா TUV 300 என்ற சிவப்பு காரின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து சாலையில் இடது புறம் இருந்த தடுப்புசுவரின் மோதி சர்வீஸ் ரோட்டில் சிறுவர்கள் சென்ற சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்பட்டுத்தியதில் சிறுவர் மூன்று பேரும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள் என தெரியவந்தது. 28.02.2023 ம் தேதி நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 09.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிடத்தின் சாட்சிகள் குமார், பாஸ்கர் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்து, சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **பார்வை மகசர் ஏற்கனவே அ.த.சாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்பு இவ்வழக்கின் வாதி ராஜீ, பாஸ்கர், குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சூர்யா, விஜய், ரபீக் என்ற சிறுவர்கள் மரணம் அடைந்ததால் வாணியம்பாடி உட்கோட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக ந.க.எண். 15/DSP/VNB/PG/2023 Dated:28.02.2023 கண்ட செயல் முறைப்படி விஜய் வயது –13 த/பெ ராஜீ என்பவரின் பிரேத்தின் மீது வாணியம்பாடி கிராமிய காவல் ஆய்வாளர் அருண்குமார் அவர்களையும், ரபீக் வயது –13 த/பெ சாமுவேல் என்பவரின் பிரேத்தின் மீது வாணியம்பாடி நகர காவல் ஆய்வாளர்

திரு. நாகராஜன் அவர்களையும் பிரேத விசாரணை மேற்கொள்ள உத்தரவு வழங்கினேன். நான் இவ்வழக்கில் இறந்து போன சூர்யா, வயது –12 த/பெ ராஜீ என்பவரின் பிரேத்தின் மீது வாணியம்பாடி அரசு மருத்துவனையில் சாட்சி மற்றும் பஞ்சாய்த்தார்கள் முன்னிலையில் 11.00–12.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்தேன். **சூர்யாவின் பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வாதி ராஜீ என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் பிரேத விசாரணை சாட்சிகள் மேரி, சதீஷ், இன்பரசன், அஜீத்குமார் ஆகியோர்களையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சூர்யா என்பவரின் இறப்பின் உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்ள வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய தலைமை காவலர் திரு.சரவணன் 250 என்பவரின் மூலம் அனுப்பி வைத்தேன். அதே போல் வாணியம்பாடி நகர காவல் ஆய்வாளர் திரு. நாகராஜன் அவர்களின் ரபீக் என்பவரின் பிரேத்தின் மீது வாணியம்பாடி அரசு மருத்துவனையில் சாட்சி மற்றும் பஞ்சாய்த்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டும், வாணியம்பாடி நகர காவல் ஆய்வாளர் திரு. அருண்குமார் அவர்கள் விஜய் என்பவரின் பிரேத்தின் மீது வாணியம்பாடி அரசு மருத்துவனையில் சாட்சி மற்றும் பஞ்சாய்த்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வழக்கின் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் சரவணன், ராஜா, ராஜ்குமார் ஆகியோரையும் எதிரி சந்தோஷ் என்பவர் ஓட்டி வந்த காரில் பயணம் செய்து வந்த காரில் இருந்த இளவரசன், ராகுல், அரவிந்த், கௌதம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். என்னுடைய புலன் விசாரணையில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்த வாக்குமூலங்களில் இருந்தும் வாதி ராஜீ என்பவரின் மகன்கள் சூர்யா , விஜய் ஆகியோர்கள் ஒரு சைக்கிளிலும் வாதியின் பக்கத்துவீட்டு வசிக்கும் சாமூவேலின் மகன் ரபிக் ஒரு சைக்கிளிலும் கிரிசமுத்திரத்தில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளிக்கு செல்லும் போது காலை 08.45 மணிக்கு சம்பவயிடமான ஆம்பூர் – வாணியம்பாடி நெடுஞ்சாலையில் வளையாம்பட்டு சாமி அன்கோ லெதர் கம்பெனி சர்வீஸ் ரோடில் ஆம்பூர் மார்க்கமாக இருந்து வந்து KA 03 AF 0194 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா TUV 300 என்ற சிவப்பு காரின் ஓட்டுநர் சந்தோஷ் என்பவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து சாலையில் இடது புறம் இருந்த தடுப்புசுவரின் மோதி சர்வீஸ் ரோட்டில்

சிறுவர்கள் சென்ற சைக்கிளின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் சிறுவர் மூன்று பேரும் சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார்கள் என தெரியவருகிறது. இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய KA 03 AF 0194 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா TUV 300 என்ற சிவப்பு காரின் ஓட்டுநர் சந்தோஷ் என்பவரை தேடிவந்த நிலையில் 28.02.2023 ம் தேதி 16.00 மணிக்கு வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் ஆஜர் ஆன எதிரி சந்தோஷ் வயது–20, த/பெ வெங்கடேசன் , கே.கே நகர், வேலூர் என்பவரை வழக்கில் கைது செய்து அதுக்குறித்து அவரது தந்தைக்கு தகவல் தெரிவித்தும், பின்பு எதிரி சந்தோஷ் என்பவர் எந்தவித அச்சுறுத்தலும் துன்புறுத்தலும் ஆசைவார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த சாட்சிகள் விக்ரம், சுமதி அவர்களின் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை 16.30–17.15 மணி வரை பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு எதிரி சந்தோஷ் என்பவரை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிக்கொண்டேன். 03.03.2023 ம் தேதி இவ்வழக்கை மேலும் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாணியம்பாடி அரசு மருத்துவனைக்கு சென்று இவ்வழக்கில் இறந்து போன சூர்யா என்பவரின் பிரேத்தின் மீது 28.02.2023 அன்று பிரேதபரிசோதனை செய்து சூர்யாவின் இறப்பிற்கு காரணம் தலையில் ஏற்பட்ட காயம் மற்றும் விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியால் இறந்துள்ளார் என சான்று பெற்றும், விஜய் பிரேத்தின் மீது இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு தனித்தனியாக தனது அபிப்பிராயத்தை வழங்கிய பிரேத பரிசோதனை செய்த வாணியம்பாடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திருமதி. சத்திய பாக்கியலட்சுமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும் மேலும் இவ்வழக்கில் இறந்து போன ரபீக் என்பவரின் பிரேத்தின் மீது 28.02.2023 ம் தேதி பிரேத பரிசோதனை செய்து ரபீக்கின் இறப்பிற்கு காரணம் சாலைவிபத்தால் தலையில் ஏற்பட்ட காயம் மற்றும் அதிர்ச்சியினால் இறந்துள்ளார் என அபிப்பிராயத்தை வழங்கி பிரேத பரிசோதனை செய்த வாணியம்பாடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திரு. கனேசன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் இறந்து போன சூர்யா என்பவரின் பிரேத்தை 28.02.2023 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவணைக்கு பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பின்பு பிரேதத்தை நல்லடக்கம் செய்ய தலைமை காவலர் திரு.சரவணன் 250 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

விஜய் என்பவரின் பிரேத்தை 28.02.2023 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவணைக்கு பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பின்பு பிரேதத்தை நல்லடக்கம் செய்ய தலைமை காவலர் திரு.மூர்த்தி 294 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். ரபீக் என்பவரின் பிரேத்தை 28.02.2023 ம் தேதி வாணியம்பாடி அரசு மருத்துவணைக்கு பிரேத பரிசோதனைக்கு ஆஜர் செய்து பின்பு பிரேதத்தை நல்லடக்கம் செய்ய முதல் நிலை காவலர் திரு. மனோகரன் 435 என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இந்த விபத்தில் விபத்து ஏற்படுத்திய வாகனம் KA 03 AF 0194 என்ற பதிவு எண் கொண்ட மகேந்திரா TUV 300 வாகனத்தை விபத்திற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். அவரின் கருத்துப்படி I Am of the opinion that the accident was not due to any mechanical defect of the vehicle என்று வாகன ஆய்வாளர் திரு. வெங்கட்ராகன் என்பவர் அறிக்கை கொடுத்தவரை விசாரித்து 17.03.2023 ம் தேதி வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வு அறிக்கை பெற்றேன். மேற்படி வாகனத்தின் ஆய்வறிக்கை அ.த.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து விஜய் என்பவரின் பிரேத்தின் மீது விசாரணை செய்த வாணியம்பாடி கிராமிய காவல் ஆய்வாளர் திரு. அருண்குமார் மற்றும் ரபீக் என்பவரின் பிரேத்தின் மீது விசாரணை செய்த வாணியம்பாடி நகர காவல் ஆய்வாளர் திரு. நாகராஜ் என்பவரிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் என்னுடன் தட்டச்சு செய்த முதல் நிலை பெண் காவலர் திருமதி. துளசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்துக்கொண்டு குற்றம் உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய எதிரி சந்தோஷ் என்பவரன் மீது சட்டப்பிரிவுகள் 279,304(A) IPC (3 Counts) என இறுதி அறிக்கை தாக்கல் செய்து வாணியம்பாடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். நான் விசாரித்தபோது சாட்சிகள் அனைவரும் குவிமுச 161(3) இல் உள்ளது போல் தான் சொன்னார்கள் என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சி ராகுல், இளவரசன், அரவிந்த், கௌதம் என்பவர்கள் காலை 07.00 மணிக்கு வேலூரில் இருந்து ஏலகிரி செல்வதற்காக வண்டியை வாடகைக்கு எடுத்துக்கொண்டு நண்பர் சந்தோஷ் என்பவரை வண்டியை ஓட்ட சொல்லி காலை 08.45 மணிக்கு கிரிசமுத்திரம்

கூட்ரோட்டை தான்டி சிறிது தூரம் சென்ற போது அவர்களுக்கு முன்னால் சென்ற இருசக்கர வாகனம் வந்த போது சந்தோஷ் வலது புற லைனில் சென்றார். அங்கு லாரி இருந்ததால் இடதுபுறமாக அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் திரும்பியதால் கட்டுபாட்டை இழந்த கார் இடதுபுறம் இருந்த தடுப்பு சுவரில் மோதி சர்விஸ் ரோட்டில் சைக்கிளில் பள்ளிக்கு சென்றுக்கொண்டிருந்த இறந்த மூன்று சிறுவர்கள் மீது மோதி விபத்தை ஏற்பட்டதை நேரில் பார்த்ததாக என்னிடம் கூறினார்கள். காரில் பயணித்த மேற்படி நால்வருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என்றும் கூறினர்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் இறப்புற்ற நபர்கள் வளையாம்பட்டில் எந்த பகுதியை சேர்ந்தவர்கள் என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் எம்.ஜீ.ஆர் நகர். அந்த எம்.ஜீ.ஆர் நகர் எங்கு உள்ளது என்றால் சாமி அன்கோ லெதர் கம்பெனியில் இருந்து சிறிது தூரத்தில் உள்ளது. நான் கூறுவது தவறு என்றாலும் அப்பகுதியில் எம்.ஜீ.ஆர் நகர் இல்லை என்றாலும் இரயில் ரோட்டையை தாண்டி உள்ள காலனிபகுதியில் தான் எம்.ஜீ.ஆர் நகர் உள்ளது என்றால் சரியல்ல. விபத்து நடந்த நேரம் என்னவென்றால் 08.45 மணிக்கு. வளையாம்பட்டில் இருந்து கிரிசமுத்திரத்தை கடந்து இரயில் வே பாதையை தாண்டி பள்ளிக்கு செல்ல எத்தனை கி.மீ வரும் என்றால் 1–1.5 கி.மீ இருக்கும். வளையாம்பட்டில் இருந்தும் விபத்து நடந்த இடத்தில் இருந்தும் பள்ளிக்கு சுமார் 4–5 கி.மீ. உள்ளது என்றால் சரியல்ல. கிரிசமுத்திரத்தில் அரசு பள்ளி எங்கு உள்ளது என்றால் கிரிசமுத்திரத்தின் பேருந்து நிறுத்தில் இருந்து முக்கால் கி.மீ இருக்கும். அந்த பள்ளி எந்த சூழ்நிலையில் அமைந்துள்ளது என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. கிரிசமுத்திரத்தின் பள்ளிக்கு செல்லும் ரோடானது இரயில்வே கேட்டை தாண்டி மேடான பகுதியாக இருக்கும் என்றால் சரியல்ல. வளையாம்பட்டில் இருந்து கிரிசமுத்திரம் பள்ளிக்கு செல்ல வழியுள்ளதா என்றால் உள்ளது. அந்த பாதை பள்ளிக்கு செல்ல குறுக்கு வழி என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் யாருக்கு சொந்தமானது என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அது பெங்களூரை சேர்ந்த ஒரு நபருடையது. அவரிடம் இருந்து வேலூர் சாத்துமதுரை யுனிவர்சல் டிரான்ஸ்போர்ட் ரிபேர் என்ற கம்பெனியில் இருந்து வாடகைக்கு எடுத்து வந்துள்ளனர். வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. வாகனத்தின் உரிமையாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்தால் தான் வாடகைக்கு வண்டி எடுக்கப்பட்டதா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய கார் Fully Automatic Car என்றால் சரியல்ல. பொதுவாக Fully Automatic வாகனத்தில் ஸ்டேரிங்க்கு செல்லக்கூடிய ஆயில் சரிவர செல்லாமல் இருந்தால் மேற்படி ஸ்டேரிங்க் கடினமாக மாறிவிடும் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

(உணவு இடைவேளைக்காக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கபட்டது.)

மீண்டும் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை

எந்த lane ல் இருந்து எந்த lane க்கு வண்டி மாறியது என்றால் ஆம்பூரில் இருந்து வாணியம்பாடி நோக்கி வந்து இடது பக்கத்தில் உள்ள சர்வீஸ் ரோட்டிற்கு தடுப்பு சுவரில் மோதி சென்றது. அந்த தடுப்பு சுவர் இரும்பு கம்பியால் இருந்தது என்றால் சரிதான். சாமி அன்கோ கம்பெனிக்கு சற்று முன்பு இருந்து வளையாம்பட்டு முருகன் கோவில் தாண்டும் வரை சற்று வளைவான பாதை என்றால் சரிதான். அப்போது சாலையின் நடுப்பகுதியில் காகிதப்பூச்செடிகள் இருந்தது என்றால் சரிதான். அப்படி இருக்கும் போது அது பார்வை குறைவான பகுதி என்றால் சரியல்ல. அந்த மாதிரி உள்ள பகுதியில் வாகனம் வேகமாக வர வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நெடுஞ்சாலை என்பது தங்குதடை இல்லாமல் பயணம் செய்ய மத்தியஅரசால் ஏற்படுத்தப்பட்ட சாலை என்றால் சரிதான். இறப்புற்ற நபர்கள் சர்வீஸ் ரோட்டில் தவறான பாதையில் சென்றார்கள் என்றால் சரியல்ல, சரியான பாதையில் தான் சென்றார்கள். அந்த வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் ஐந்து நபர்கள் சென்றுள்ளார்கள். ஏழு பேர் சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஐந்து நபர்களில் எத்தனை நபர்களுக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. அந்த வாகனத்தை யார் சாத்து மதுரையில் இருந்து ஓட்டி வந்து வேலூருக்கு வந்து எதிரியிடம் கொடுத்தது என்றால் சந்தோஷ் தான் சாத்து மதுரையில் இருந்து வண்டியை கொண்டுவந்துள்ளார். வாகனமானது வலது புறத்தில் இருந்து இடது புறம் போய் மோதியிருந்தால் வலதுபுறம் தான் சென்றிருக்கும் என்றால் சரியல்ல. நான்கு நபர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்ததாக சொல்லியிருந்த நிலையில் காவல் நிலையத்தில் வைத்து தான் பதிவு

செய்தோம் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலமும் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தோம் என்றால் சரிதான். இறுதி அறிக்கையை தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தையும் நான் அன்றைய தினமே தயார் செய்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் அனைவரும் விபத்து எப்படி நடந்து என தெரியாது என்றும் அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்து என தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சொன்ன நான்கு நபர்களை தவிர மற்ற நபர்கள் ஒரே ஊரே சார்ந்தவர்கள், உறவினர்கள் என்றால் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான். விபத்தானது எதிரியின் அஜாக்கிரதையால் நடக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது இறந்த நபர்கள் தவறான பாதையில் வந்ததால் ஏற்பட்ட விபத்து என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள நான்கு நபர்களும் வாகனத்தை ஓட்டி வந்த நபர் வேறு ஒருவர் என்றும் அவர் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பித்து ஓடீவிட்டார் என சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த தகவலை காவல் நிலையத்தில் சொல்லவந்தவர்களை தான் இவ்வழக்கில் எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த வாகனத்தையும் ஓட்டவில்லை என்றாலும் எந்த விபத்தையும் ஏற்படுத்தவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) நிலவழகன்

SRIPATHI K

SRIPATHI K
2026.07.04
13:53:44
+0530